இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 73 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 06 – வெள்ளிக்கிழமை 23 அக்டோபர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 73 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 06 - Friday 23 October 2026 - Dak 10 Pages ₹ 5.00

'திராவிட மாடல்' ஆட்சியில் ஊன்றிய விதை மரமாகிட வேண்டும்! பழக்க தோஷத்தில்

'சோழர் அருங்காட்சியகம்' திட்டத்தை ரத்து செய்துவிடாதீர்!

இராசராசச் சோழனின் சதய விழாவையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!



சென்னை, அக்.23-

"திராவிட மாடல் ஆட்சியில் ஊன்றிய விதை மரமாகிட வேண்டும். பழக்க தோஷத்தில் 'சோழர் அருங்காட்சியகம்' திட்டத்தை ரத்து செய்துவிடாதீர்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இராசராசச் சோழனின் சதய விழாவையொட்டி தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இராசராசச் சோழனின் சதய விழாவை முன்னிட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப்பதிவு, வருமாறு:-

நீர் மேலாண்மை, நில மேலாண்மை, ஆட்சி நிர்வாகம், கட்டடக்கலை, படைவலிமை, போர்த்திறன் எனப் பலவற்றிலும் மாபெரும் உயரங்களை எய்தி, தமிழர் பெருமையை உலகறியச் செய்தவர் மாமன்னர் இராசராசச் சோழன்! அவரது பிறந்தநாளினை ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடிட, 2022ஆம் ஆண்டு திராவிட மாடல் அரசில் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, 1041ஆவது சதய விழா இன்று கொண்டாடப் படுகிறது.

> **"நீர் மேலாண்மை, நில மேலாண்மை, ஆட்சி நிர்வாகம், கட்டடக்கலை, படைவலிமை, போர்த்திறன் எனப் பலவற்றிலும் மாபெரும் உயரங்களை எய்தி, தமிழர் பெருமையை உலகறியச் செய்தவர் மாமன்னர் இராசராசச் சோழன்!"**

மேலும், துறைவாரியாகச் சோழர் காலச் சிறப்புகளை இக்காலத் தலைமுறையினரின் கண்முன் கொண்டு வரவேண்டும் என்ற பேரார்வத்துடன் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் சுமார் 56 கோடி ரூபாய் செலவில் 'சோழர் அருங்காட்சியகம்' அமைக்க திராவிட மாடல் ஆட்சியில் விதையை ஊன்றியிருக்கிறோம். அந்த விதை மரமாகிட வேண்டும்!

அரசர்க்கரசரின் புகழ் வாழ்க!

பழக்க தோஷத்தில் அந்தத் திட்டத்தையும் த.வெ.க. அரசு குறுகிய பார்வையுடன் இரத்து செய்து, தமிழர் வரலாற்றை இருட்டடிப்பு செய்திட மாட்டார்கள் என நம்புவோம்.

இராசராசச் சோழனின் சதய விழா தஞ்சையில் சிறப்புற நடந்தேறுக! அரசர்க்கரசரின் புகழ் வாழ்க!

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலகக்கோரி

டெல்லியில் இன்று ஆர்ப்பாட்டம்! மாணவர்கள் - விவசாயிகள் பங்கேற்பு!

புதுடெல்லி, அக்.23-

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் ராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தி தேசிய அளவில் இன்று விவசாயிகள் உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அகில இந்திய கிசான் மோர்ச்சா, அகில இந்திய கிசான் சபா உள்ளிட்ட அமைப்புக்கள் இணைந்து இன்று டெல்லியில் போராட்டம் அறிவித்துள்ளனர். இதேபோல், நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இந்த போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தலைமை தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய வேண்டும், சட்ட விரோதமான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுடன் தொழிலாளர் சங்கங்கள், பல்வேறு சிவில் சொசைட்டி அமைப்புக்கள் உள்ளிட்டோர் போராட்டத்தில் பங்கேற்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாய சங்க தலைவர் ராகேஷ் திகாயத், ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரும், பொருளாதார ஆய்வாளருமான பரகலா பிரபாகர், வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், நடிகர் பிரகாஷ் ராஜ், மாணவர்கள் சங்கங்களின் தலைவர்கள் நேகா போரா, ஆய்ஷா கோஷ் உள்ளிட்ட பலர் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பயிர்க்கடனை முழுமையாக ரத்து செய்யக்கோரி

தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் சாலை மறியல்!

ஆயிரக்கணக்கானோரை கைது செய்து திறனற்ற த.வெ.க. அரசு அராஜகம்!

சென்னை, அக். 23 -

பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மறியலில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதியில் த.வெ.க. அறிவித்தபடி, விவசாயிகளின் பயிர்க் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். இலவச மின் சாரத்தை பறிக்கும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிட வேண்டும் என வலியுறுத்தி சாலை மறியல் செய்தனர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம், காவிரி நீர் பங்கீட்டில் தமிழகத்துக்கான உரிமையை உறுதி செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் விவசாயிகள் சங்கத்தினர் சார்பில் சாலை மறியல் நடந்தது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருமருகல், மேலப் பிடாகை, கீழ்வேளூர், தலைஞாயிறு, வேதாரண்யம் ஆகிய 5 இடங்களில் மறியல் நடந்தது.

பல்வேறு இடங்களில் சாலை மறியல்!

திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் விளம்பல், குடவாசல், நீடாமங்கலம், நன்னிலம்,



பேரளம், கொரடாச்சேரி, மன்னார்குடி, கோட்டூர், கூத்தா நல்லூர், முத்துப் பேட்டை, திருத்துறைப் பூண்டி விளக்குடி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சாலை மறியல் நடைபெற்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில், தஞ்சை பழைய பேருந்து நிலையம், ஒரத்தநாடு புதூர் பைபாஸ் சாலை, பேராவூரணி ஆவணம் சாலை, பாப்பாநாடு, திருவோணம் உள்ளிட்ட பல் வேறு இடங்களில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம், அறந்தாங்கி பேருந்து நிலையம், கந்தர்வக்கோட்டை பேரூராட்சி பேருந்து நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம் தேசிய நெடுஞ்சாலையில் விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை, லால்குடி, மணச்சநல்லூர் பகுதிகளில் விவசாயி கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

ஆயிரக்கணக்கானோர் கைது!

இதேபோல், ஸ்ரீவைகுண்டம், கோவில்பட்டி, விளாத்திகுளம், நாகர்கோவில் கிருஷ்ணன்கோவில், கருங்கல், களியல், திருவட்டார், திருப்பூர் ஊத்துக்குளி, மடத்துகுளம், கோபி, மதுரை, விருதுநகர், ராஜபாளையம், தேனி, போடி, திண்டுக்கல், திருவாடானை, மானாமதுரை, வேலூர், திருவண்ணாமலை, வந்தவாசி, செங்கம், ராணிப்பேட்டை,

திருப்பத்தூர், கடலூர், பரங்கிப்பேட்டை, சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், விருத்தாசலம், திட்டக்குடி, பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, நாமக்கல், பள்ளிபாளையம், தேன்கனிக் கோட்டை, பாப்பிரெட்டிப்பட்டி, சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி உள்ளிட்ட தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் சாலை மறியலில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான விவசாயிகள் கைது செய்யப்பட்டனர்.

அரசியல் குறுக்கீடு:

சந்தனக் கட்டைகளை வாங்க மாட்டோம்!

நாகூர் தர்கா நிர்வாகிகள் முடிவு!



நாகை, அக்.23-

நாகை மாவட்டம் நாகூரில் புகழ்பெற்ற ஆண்டவர் தர்கா உள்ளது. இங்கு ஆண்டு தோறும் கந்தூரி விழா சிறப்பாக நடைபெறும். இதன்படி நடப்பு ஆண்டின் 470வது கந்தூரி விழா நவம்பர் மாதம் 10ம்தேதி கொடியேற்றத்துடன் தொடங்க உள்ளது. அதனைத் தொடர்ந்து 19ஆம்தேதி சந்தனக்கூடு ஊர்வலம் நடைபெறும். ஊர்வலத்தில் கொண்டு வரப்பட்ட சந்தனத்தை ஆண்டார் சமாதியில் மறுநாள் 20ஆம்தேதி பூசி வழிபாடு நடைபெறும். இதில் ஏராளமானவர்கள் கலந்துகொள்வார்கள்.

இதற்காக சென்னை ஐகோர்ட் உத்தரவுப்படி கடந்த 2022ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் 40 கிலோ சந்தனக் கட்டைகளை 2023ஆம் ஆண்டு முதல் தர்கா தலைமை அறங்காவலர் உள்ளிட்ட தர்கா நிர்வாகத்தினரிடம் முதல்வர் வழங்கி வருவது வழக்கத்தில் உள்ளது. இந்நிலையில் நடப்பு ஆண்டு விழாவிற்கான சந்தனக் கட்டைகளை தர்கா தலைமை அறங்காவலரும் மற்றும் இன்னொருவரும் முதல்வர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இது தர்காவில் நிர்வாகிகளிடையே கடும் அதிர்ச்சியையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து தர்காவின் 11 அதிகாரப்பூர்வ நிர்வாகிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம் தர்காவில் நடந்தது. இதில் தர்காவிற்கு வழக்கமாக சந்தனை கட்டைகளை வழங்குபவர்களிடம் தமிழக அரசு வழங்க வேண்டும். அரசியல் தலையீடு இல்லாமல் வழக்கம் போல் தர்கா நிர்வாகிகளிடம் மட்டுமே சந்தனக் கட்டை வழங்க வேண்டும்.

நீதிமன்ற உத்தரவை மீறியதாகிவிடும்!

அரசியல் தலையீடு காரணமாக அமைச்சர் ஆதரவாளர்களை அழைத்து வழங்குவது என்றால், தர்கா நிர்வாகத்தில் இருந்து யாரும் வந்து சந்தன கட்டைகளை வாங்க மட்டோம். இது கோர்ட் நடைமுறைகளை மீறிய செயலாக மாறிவிடும். எனவே சந்தனைக்கட்டைகள் வழங்கும் நிகழ்ச்சியை புறக்கணிக்க உள்ளோம்.

இது தொடர்பாக தலைமைச் செயலர், அமைச்சர், துறை செயலர் உள்ளிட்டோருக்கு இ-மெயில் மூலம் தர்கா நிர்வாகத்தின் முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போல் அமைச்சர் ஷாஜகானை பலமுறை தொடர்பு கொண்டும், அவர் செல்போனை எடுக்கவில்லை என்று தர்கா நிர்வாகம் தரப்பில் கூறப்படுகிறது.